19.02.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**இன்று மழைக்கு வாய்ப்பு**

தென் கடலோர மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம்அறிவித்துள்ளது.

இது குறித்து, வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரத்தில் 20 மி.மீ, கன்னியாகுமரி, மயிலாடி, நாகர்கோயிலில் தலா 10 மி.மீட்டர் மழைபதிவாகியது.

தென்மேற்கு வங்கக் கடலில் நீடித்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, குமரிக் கடல், இலங்கைப் பகுதியில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையாக நீடிக்கிறது. இதன் காரணமாக, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் கடலோர மாவட்டங்களில், வெள்ளிக்கிழமை ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய பெய்யும் வாய்ப்புண்டு. மற்ற இடங்களில் வறண்டவானிலைகாணப்படும்.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். நகரின் ஒரு சில பகுதிகளில், அதிகாலை நேரங்களில் மூடுபனி காணப்படும். வெப்பநிலை அதிகபட்சமாக 90 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும். வட கிழக்கு திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கி.மீ வேகத்தில் தென் தமிழக கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்றார்.

**தீவன மக்காச்சோளம் பயிரிட்டால் அதிக லாபம்!**



அரக்கோணம்: தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறையும், பால்வளத் துறையும், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேலூர் மாவட்டம், நெமிலி வட்டாரத்துக்கு உள்பட்ட கீழ்வீதி கிராமத்தில் 50 ஏக்கரில் ரூ.64.26 லட்சம் நிதியில் கால்நடை தீவனப் பண்ணை அமைத்து கால்நடைகளுக்குத் தேவையான பல்வேறு வகையான தீவனப் பயிர்களைபயிரிட்டுவருகின்றன.

கால்நடைகளுக்கான தீவனம் எனும் நிலையில், முதலிடத்தைப் பெறுவது தீவனமக்காச்சோளம்ஆகும்.

இதை, இறவைப் பயிராக ஆண்டு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடலாம். இப்பயிருக்கான மேலாண்மையில் நிலத்தை தயாரித்தல் என்பது முக்கிய இடம்பெறுகிறது.

நிலத்தை இரும்புக் கலப்பை கொண்டு இரு முறையும், நாட்டுக் கலப்பை கொண்டு மூன்று அல்லது நான்கு முறையும் உழ வேண்டும். மேலும், தொழுஉரம் இடும்போது எக்டேருக்கு 25 டன் என்ற அளவில் தொழு

உரம் அல்லது 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (2 கிலோ), 10 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா (2 கிலோ) உள்ளிட்டவை அல்லது 20 பாக்கெட் அசோபாஸ் (4 கிலோ) ஆகியவற்றை உழும்போது வயலில்இட்டு உழவேண்டும்.

2 முதல் 3 முறை உழவு செய்து நிலத்தைப் பண்படுத்தி 60 செ.மீ. இடைவெளியில் பாத்தி அமைக்க வேண்டும். 30 செ.மீ. இடைவெளியில் பாத்தி பிடிக்கவும் அல்லது பாசன நீரின் அளவைப் பொறுத்தும் நிலத்தின் சரிவைப் பொறுத்தும் 10 அல்லது 20 சதுரமீட்டருக்கு பாத்திகள்அமைக்க வேண்டும்.

உரமிடுதல்: மண் பரிசோதனையின் படி உரமிடவும். மண் பரிசோதனை செய்யாவிடில் (எக்டேருக்கு) அடியுரமாக 30:40:20 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து இடவும். விதைத்து 30-ஆவது நாளில் மேலுரம் (எக்டேருக்கு) 25 கிலோ தழைச் சத்தை இடவும்.

விதைப்பு: இடைவெளி 30 ல 15 செ.மீ. இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் அவசியம். விதை அளவு எக்டேருக்கு 40 கிலோ. விதைப்புக்கு முன் மூன்று பாக்கெட்டுகள் அசோஸ்பைரில்லம் (எக்டேருக்கு 600 கிராம்) உயிர் உரத்தைக் கொண்டு விதை நேர்த்திசெய்யவேண்டும்.

நீர் நிர்வாகம்: விதைக்கவுடன் நீர்ப்பாய்ச்சுதல் அவசியம். களை நிர்வாகம் என்பது இதில் அதிக அளவில் இல்லை என்றாலும் களைகள் இருக்கும்போது அவற்றை நீக்கவும். அறுவடை: கதிர் பால் கட்டும் பருவத்தில் இருக்கும்போது அறுவடை செய்யவும். தீவன மக்காச்சோளம் குறித்து மேலும் விவரங்கள் தேவைப்படுவோரும், இப்பயிருக்கான விதைகள் தேவைப்படுவோரும் விதைகளைத் தயாரிக்க முனையும் விவசாயிகள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மையத் தலைவர் அல்லது உதவிப் பேராசிரியர்களை அணுகினால் அவர்கள்இதுகுறித்துவிளக்குவர்.

**அதிக மகசூல் தரும் மா!**



திருநெல்வேலி: அதிக மகசூல் தரும் மா சாகுபடி செய்து பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, திருநெல்வேலி தோட்டக்கலை துணை இயக்குநர் டி.சி. கண்ணன்வெளியிட்டசெய்திக்குறிப்பு:

மா சாகுபடியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. உலகின் மொத்த சாகுபடியில்இந்தியா50சதவீதம்பூர்த்திசெய்கிறது.

ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மா மரங்கள் பூத்து, காய் பிடிக்கத் தொடங்கும். ஒரு லிட்டர் நீரில் 10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் கலந்து தெளித்தால், பூக்காத மரங்களும்பூத்துக்காய்க்கும்.

தத்துப் பூச்சிகள்: இப்பூச்சிகளின் குஞ்சுகள் மா பூக்கும் தருணத்தில் பூங்கொத்துகளின் சாறை உறிஞ்சுவதால் அவை வாடுவதுடன், சேதம் அதிகரிக்கும். மொட்டுகளும், பூக்களும் கருகி உதிரும். குஞ்சுகள் தேன் போன்ற திரவத்தைச் சுரப்பதால் இலை, பூங்கொத்துகளில் அதன் துளிகளைக் காணலாம். இத்திரவம் காரணமாக, கேப்னோடியம் எனும் பூசணம் பூங்கொத்துகளைத் தாக்கி, கருமையாக மாற்றி, உதிரச் செய்யும்.

பாதுகாப்பு: மரத்தில் குறுக்கு நெடுக்காகவும், அடர்த்தியாகவும் உள்ள கிளைகளை ஆகஸ்ட், செப்டம்பரில் முறையாக கவாத்து செய்து பூக்கும் தருணத்தில் தத்துப்பூச்சி தாக்குதலைபெருமளவுகுறைக்கலாம்.

பூக்கும் தருணத்தில் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த, பூங்காம்பு உருவாகும் தருணத்திலும், இரு வாரத்துக்கு பிறகும் மருந்து தெளிக்கலாம். ஒரு லிட்டர் நீருக்கு ஒன்றரை மில்லி பாசலோன் 35 ஈ.சி. மருந்துடன் 5 மில்லி வேப்பெண்ணெய் கலந்து தெளிக்கவேண்டும்.

மறுமுறை 10 லிட்டர் நீரில் 3 மில்லி இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எல். மருந்துடன் 50 மில்லி வேப்பெண்ணெய் கலந்து தெளிக்க வேண்டும்.

பூங்கொத்துப்புழு: இப்புழு பூ பூக்கும் தருணத்தில் பூங்கொத்துக்களில் கூடுபோல கட்டி மொட்டுகளைத் தின்று சேதப்படுத்தும். பாசலோன் 35 ஈ.சி. 2 மில்லி மருந்தை 1 லிட்டர் நீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். மாங்கொட்டைக் கூன் வண்டு, பெண் கூன் வண்டு ஆகியவை மாம்பழப் பிஞ்சின் தோல் பகுதியில் வெட்டியெடுத்து அதில் முட்டைகளை இடுகின்றன. தோலில் சுரக்கும் பால்போன்ற திரவம் முட்டைகளை, வெட்டியெடுத்த பகுதியை மறைத்து விடும். புழுக்கள் குடைந்து சென்று விதைப் பகுதியினுள் கரும்பழுப்பு நிற வண்டாக மாறும். இப்புழுக்கள் விதைப்பருப்பைத் தின்று சேதப்படுத்துவதால் காய்கள் பழுப்பு நிறத்தில் மாறி உதிரும்.

மாந்தோப்புகளில் மரத்தின் கீழ் விழும் காய், கொட்டைகள், சருகுகளை சேகரித்து எரித்து விடவேண்டும். மாம்பிஞ்சுகள் பட்டாணி அளவில் இருக்கும்போது ஒருமுறை, 15 நாள்களுக்கு பிறகு ஒருமுறை என ஒரு லிட்டர் நீரில் 2 மில்லி என்ற அளவில் பென்தியான் 100 ஈ.சி. கலந்து தெளிக்கலாம். பழ ஈக்கள் தாக்குவதால் மாம்பழம் வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும். பெண் ஈக்கள் 5 முதல் 10 நீள் வெண் முட்டைகளை காய்களில் செருகி, முட்டையிலிருந்து வெளியாகும் புழுக்கள் சதைப்பகுதியைத் தின்று அழிக்கிறது. இதனால் தோலில் பழுப்பு நிறத் திட்டுகள் உருவாகி, நடுப்பகுதியில் கரும் புள்ளி தோன்றி பழம் அழுகி விடுகிறது.

இடை உழவு செய்வதால் மரத்தைச் சுற்றி மண்ணில் உள்ள கூட்டுப் புழுக்களை அழிக்கலாம். ஒரு லிட்டர் நீரில் ஒரு மில்லி மிதைல் யூஜீனால்,

2 மில்லி மாலத்தியான் 50 ஈ.சி. கலந்து கிடைக்கும் கரைசலில் ஒரு பாட்டிலில் 10 மில்லி வீதம் 5 அல்லது 6 அடி உயரத்தில் ஏக்கருக்கு 10 எண்ணிக்கையில் வைத்து தாய்ப் பழ ஈக்களைக் கவர்ந்து அழிக்கலாம். வெம்பி விழும் பழங்களைச் சேகரித்து அழிக்கலாம். ஒரு லிட்டர் நீரில் 30 மில்லி வேப்பெண்ணெய் கலந்து தெளிக்கலாம். மரத்தில் தாக்கும் மா தண்டுப்புழுவில், பெண் வண்டு தனது முட்டைகளை மரப்பட்டை அடியில் இடுகிறது. இப்புழுக்கள் மரத்தைக் குடைந்து சென்று சேதம் உண்டாக்குகிறது. இவற்றை கம்பியால் குத்தி அழிக்கலாம். துளையில் 5 கிராம் கார்போபியூரான் 3 சதவீதம் குருணையை இட்டுக் களிமண்ணால் பூச வேண்டும். 5 செமீ அளவில் சதுர வடிவ மரப்பட்டையை நீக்கி, 10 மில்லி மானோகுரோட்டோபாஃபஸ பஞ்சில் நனைத்து மரப்பட்டையை வைத்துக் களிமண்ணால் பூச வேண்டும். ஆனால், காய்க்காத பருவத்தில்தான் இந்த யுக்தியைக் கையாள வேண்டும். விவசாயிகள் மாம்பழம் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அதிக மகசூல் பெறலாம்.

## பாரம்பரிய விவசாயத்தை தீவிரப்படுத்த ஆட்சியர் வலியுறுத்தல்

நகர்ப்புற மக்களின் உணவுப் பழக்கங்களில் ஏற்பட்டுவரும் மாறுதல் காரணமாக, விவசாயிகள் பாரம்பரிய இயற்கை வழி விவசாயத்தை தீவிரப்படுத்த வேண்டும் என, மதுரை மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவராவ் வலியுறுத்தினார்.

மதுரை வேளாண்மைக் கல்லூரியில் வேளாண் அறிவியல் மையம் சார்பில், மாசிப்பட்ட வேளாண் விழிப்புணர்வுப் பெருவிழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில், ஆட்சியர் தலைமை வகித்துப் பேசியதாவது: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரிகளும் சிறுதானிய உற்பத்தியிலும், மதிப்புக்கூட்டிய பொருள்கள் தயாரிப்பிலும் பல நுணுக்கங்களைக் கண்டறிந்துள்ளன. இவை, கிராமப்புற விவசாயிகளைச் சென்றடைய வேண்டும்.

நகர்ப்புற மக்கள் சிறுதானியங்களை அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். எனவே, விவசாயிகள் பாரம்பரிய இயற்கை வழி விவசாயத்தை தீவிரப்படுத்த வேண்டும். இதற்கான அரசு உதவிகளை விவசாயிகள் பயன்படுத்தி அதிக லாபம் பெறவேண்டும் என்றார்.

பின்னர், தமிழக அரசு வழங்கும் உதவிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு, மதுரை மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஆர். கோபாலகிருஷ்ணன் பேசினார்.

இதில், நெல் உற்பத்தியில் சாதனை படைத்து, தமிழக அரசிடம் பரிசு பெற்ற விவசாயிகளான திருப்பாலை பத்மநாபன் மனைவி பிரசன்னா, டி.வல்லாளபட்டி அருணாசலம், குலமங்கலம் கிருஷ்ணன் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில், சிறுதானியங்கள், பழங்களை மதிப்புக்கூட்டிய பொருளாக்கம் செய்வது குறித்த அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதில், ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

முன்னதாக, மதுரை வேளாண் அறிவியல் மைய தலைவர் இரா. வீரபுத்திரன் வரவேற்றார். வேளாண் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மு. கல்யாணசுந்தரம், மனையியல் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) எஸ். காஞ்சனா, வேளாண் துணை இயக்குநர் இரா. ரவிச்சந்திரன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் கோ. பூபதி, பட்டு வளர்ச்சித் துறை மண்டல இணை இயக்குநர் இரா. ஆல்பர்ட் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கல்லூரி வேளாண். விரிவாக்கத் துறை தலைவர் பெ.பொ. முருகன் நன்றி கூறினார்.

## அரச்சலூரில் ரூ.24 ஆயிரத்துக்கு தேங்காய் ஏலம்

அரச்சலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் ஏலம் ரூ.24,925-க்கு நடைபெற்றது.

அரச்சலூர் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 1,556 கிலோ எடையுள்ள 3,882 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்ச விலையாக டன்னுக்கு ரூ. 17,099-க்கும், குறைந்த விலையாக டன்னுக்கு ரூ.13,449-க்கும் என மொத்தம் ரூ.24,925-க்கு ஏலம்

நடைபெற்றது. தேங்காய் ஒன்று ரூ.4.30 முதல் ரூ.9.30 வரை விற்பனையானது.

**விவசாயிகளுக்கு "அட்மா' திட்டத்தின் கீழ் பயிற்சி**

விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மைப் பயிற்சி "அட்மா' திட்டத்தின் கீழ் இடங்கணசாலை அருகே உள்ள மடத்தூரில் புதன்கிழமை நடைபெற்றது.
மகுடஞ்சாவடி வேளாண் துறையின் சார்பில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு வேளாண் அலுவலர் மோகனசரிதா தலைமை வகித்து, சிறுதானியப் பயிர்கள் சாகுபடி முறைகள் மற்றும் பயன்பாடு பற்றியும், சிறுதானியப் பொருள்களிலிருந்து மதிப்புக் கூட்டுதல், அறுவடைக்குப்பின் தொழில்நுட்பம் குறித்தும் பயிற்சி அளித்தார்.
இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள், மகுடஞ்சாவடி வட்டார துணை வேளாண் அலுவலர் ஈஸ்வரன், உதவி வேளாண் அலுவலர் சண்முகம், வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பின்னர் விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

**அலங்கார மீன் வளர்ப்பு: புதுகை விவசாயிகள் தூத்துக்குடிக்கு களப்பயணம்**

அலங்கார மீன்கள் வளர்ப்பு குறித்து அறிந்துகொள்ள புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் தூத்துக்குடிக்கு களப்பயணம் மேற்கொண்டனர்.

புதுக்கோட்டை வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன் தலைமையில், 50 விவசாயிகள் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்துக்கு அண்மையில் அழைத்துச் செல்லப்பட்டனர்.தூத்துக்குடி ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் வீரபத்ரன், பேராசிரியர் ஜமீலா தங்கராணி ஆகியோர் அலங்கார மீன்கள் வளர்ப்பது குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சி. சுகன்யா, உதவித்

தொழில்நுட்ப மேலாளர் எல். அருளரசு, உதவி தொழில்நுட்ப மேலாளர் எஸ். நவாப்ராஜா ஆகியோர் பயண ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**குமரி மாவட்டத்தில் மிதமான மழை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதன்கிழமை இரவு மிதமான மழை பெய்தது.

குமரி மாவட்டத்தில், கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக வெயில் சுட்டெரித்து வருகிறது. ஜனவரி மாதம் இரவில் பனியும், பகலில் கடும் வெயிலும் என, பொதுமக்களை வாட்டி வதைத்தது. வெயிலின் தாக்கத்தால் பகல் நேரங்களில் பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியே வருவதை தவிர்த்தனர். தை, மாசி மாதத்திலேயே சித்திரை மாத வெயில் போன்று கடுமையான வெயில் அடித்தது.

இந்நிலையில், கடந்த 2 நாள்களாக மாலையில் குளிர்ந்த காற்று வீசியது, புதன்கிழமை நள்ளிரவு திடீரென சாரல் மழை பெய்தது. சுமார் 45 நிமிடங்கள் பெய்த மழையால் வெப்பம் தணிந்து, நாகர்கோவில் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் குளிர்ச்சியான சூழ்நிலை காணப்பட்டது. மாவட்டத்தில் அதிகபட்சமாக கொட்டாரத்தில் 18 மி.மீ. மழை பதிவானது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் பெய்த மழை அளவு (மி.மீட்டரில்): மயிலாடி 9.2, நாகர்கோவில் 8, பொய்கை 4, பாலமோர் 3.2, மாம்பழத்துறையாறு 3, அடையாமடை 2, சுருளோடு 1.6, புத்தன்அணை 1.4, பேச்சிப்பாறை 1.2, பெருஞ்சாணி 1.2.

**ரப்பர் மரங்களால் குறையும் நிலத்தடி நீர்மட்டம்**

குமரி மாவட்டத்தில் நன்செய் மற்றும் புன்செய் நிலங்களில் தோட்டப் பயிர்கள் சாகுபடி அதிகரித்து வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதாக நிலத்தடி நீர் ஆய்வாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.

குமரி மாவட்டத்தில் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் படிப்படியாக மாற்றம் செய்யப்பட்டு அவற்றில் தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்யும் நிலை ஏற்பட்டு வருகிறது. பல பகுதிகளில் வீட்டு மனைகளாகவும் மாற்றப்பட்டு வருகின்றன.

இம் மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு வட்டங்களில் முன்காலங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்ட விளை நிலங்கள், வாழை, தென்னைக்கு மாற்றப்பட்டு தற்போது ரப்பர் தோட்டங்களாக மாறியுள்ளன. ரப்பர் தோட்டங்களில் தண்ணீர் தேங்கி நிற்க வேண்டிய அவசியம் இல்லையென்பதால் இப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் தொடர்ந்து தாழ்ந்து வருகிறது.

இதுகுறித்து முன்னோடி நிலத்தடி நீர் ஆய்வாளர் பி. ரவிசந்திரன் கூறியதாவது:

குமரி மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் தொடர்ந்து தாழ்ந்து வருகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பு 100 அடி ஆழத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்ட நிலையில், தற்போது குறைந்தது 300 அடிக்கு அமைத்தால் மட்டுமே தண்ணீர் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.

வயல் பகுதிகளில் 20 அடி ஆழத்தில் கிணறு அமைத்தால் தண்ணீர் கிடைத்து வந்த நிலையில், தற்போது குறைந்தது 50 அடி ஆழத்தில் கிணறு அமைக்க வேண்டியுள்ளது. இதனால் தண்ணீர் இறைப்பதற்கு கூடுதல் மின்சார செலவு ஏற்படுகிறது. ரப்பர் போன்ற தோட்டப் பயிர்கள் மலைப் பகுதிகளில் மட்டுமே நடப்பட வேண்டும். இல்லையேல் குடிநீருக்கு திண்டாட வேண்டிய நிலை ஏற்படும் என்றார் அவர்.

**இணையதள வேளாண் சந்தை:ஏப்.14-ல் தொடங்கி வைக்கிறார் பிரதமர் மோடி**




நாட்டின் எந்த மூலையில் இருந்தும் விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கு வசதியாக, வரும் ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி, "இணையதள வேளாண் சந்தை' தொடங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
வரும் 2022-ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருவாய் இரு மடங்காக அதிகரிக்கும்என்றும்அவர்உறுதியளித்தார்.

மத்தியப் பிரதேச மாநிலம், சீஹோரில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பயிர்க் காப்பீட்டுத் திட்டத்துக்கான வழிகாட்டும் நெறிமுறைகளை வெளியிட்டார். பின்னர் அவர்பேசியதாவது:
பருவம் தவறிய மழை, வறட்சி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நலனை உறுதிசெய்வதற்காக, பயிர்க் காப்பீடு, மண்வள அட்டைத் திட்டம், நீர்ப்பாசனத் திட்டம், இயற்கை விவசாயம் ஆகிய திட்டங்களை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
விவசாயிகள் கடினமாக உழைத்தாலும், தங்களின் விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்காததால், அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால், அருகில் இருக்கும் ஏதாவது ஒரு

மண்டியில் தங்களது விளைபொருள்களை விற்கும் நிலை ஏற்படுகிறது. இதுபோன்ற பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்காக, இணையதளக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக, "தேசிய வேளாண் சந்தை" என்ற பெயரில் இணையதளம் ஒன்று உருவாக்கப்படும். அந்த இணையதளமானது, சட்டமேதை அம்பேத்கரின் பிறந்த தினமான, வரும் ஏப்ரல் 14-ஆம் தேதி, தொடங்கப்படும்.

அந்த இணையதளம் வாயிலாக, விவசாயிகள் தங்களது செல்லிடப்பேசியைப் பயன்படுத்தியே, நல்ல விலை கிடைக்கும் பகுதிக்கு தங்களது விளைபொருள்களை விற்பனைசெய்யலாம். நாடு சுதந்திரம் அடைந்த 75-ஆவது ஆண்டு விழா, வரும் 2022-ஆம் ஆண்டு கொண்டாடப்படவுள்ளது. அந்த ஆண்டில், விவசாயிகளின் வருவாயை இரு மடங்காக உயர்த்துவதற்கு அனைத்து மாநில அரசுகளும், வேளாண் சமூகத்தினரும் உறுதியேற்க வேண்டும். அதற்கான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு அளிக்கும். இதேபோல், நாடு முழுவதும் உள்ள 585 மொத்த விலை மண்டிகளையும், வரும் 2018-ஆம் ஆண்டுக்குள், இணையதளம் வாயிலாக ஒருங்கிணைக்கும் பணிகளை மத்திய அரசுதொடங்கியுள்ளது. விவசாயிகள், பாரம்பரிய வேளாண் அறிவையும், நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி, விவசாயத் துறையை மேம்படுத்த வேண்டும். உள்ளூரின் தேவையை மட்டுமன்றி, வெளிநாடுகளின் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் விவசாயிகள் பாடுபட வேண்டும் என்றார் பிரதமர் மோடி. இந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் சுஷ்மா ஸ்வராஜ், ராதா மோகன் சிங், மத்தியப் பிரேதச முதல்வர் சிவராஜ் சிங் செளஹான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**காய்கனி பயிரிடும்விவசாயிகள் கவனத்திற்கு...**

வாலாஜாபாத்;சாகுபடியில், 40 சதவீத மானியத்தில் காய், கனி விதைகளை பெற விரும்பும் விவசாயிகள், அந்தந்த தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை நாடலாம் என, தோட்டக்கலை துணை இயக்குனர் தெரிவித்து உள்ளார். காஞ்சிபுரம் தோட்டக்கலை துறை, துணை இயக்குனர் கோல்டி பிரேமாவதி கூறியதாவது:காய்கனி பயிரிடும் விவசாயிகள் சாகுபடி பரப்பிலிருந்து, 40 சதவீதம் மானியம் பெறுவதற்கு உரிய ஆவணங்களுடன், அந்தந்த வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் அலுவலகத்தை நாடி, காய்கனி விதைகளை வாங்கி பயன் பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

**விவசாயிகளுக்குகாய்கறி விதைகள் வழங்கல்**

திருத்தணி;தோட்டக்கலை துறையின் மூலம், 25 விவசாயிகளுக்கு, காய்கறி விதைகள் இலவசமாக நேற்று வழங்கப்பட்டன.திருத்தணி ஒன்றியத்தில், 1,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் தோட்டப்பயிர்கள் மட்டுமே செய்து வருகின்றனர். இவர்கள் பயன்பெறும் வகையில், தோட்டக்கலை துறையின் சார்பில், கத்திரி, வெண்டை, பாகல் மற்றும் சொரைக்காய் போன்ற காய்கறி பயிர்களுக்கு விதைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.ஒரு ஏக்கருக்கு கத்திரி மற்றும் வெண்டை விதைகள், 900 கிராம், பாகல் மற்றும் சொரைக்காய் விதைகள், 750 கிராம்

விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.நேற்று, 25 விவசாயிகளுக்கு மேற்கண்ட காய்கறி விதைகள் வழங்கப்பட்டன என, தோட்டக்கலை துறையினர் தெரிவித்தனர்.

**பூத்து குலுங்கும் மாமரங்கள்**

ஆர்.கே.பேட்டை;பருவ காலத்தில் பெய்த கன மழையால், மாந்தோப்புகளில் மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. இதனால், நடப்பு ஆண்டில், அதிக மகசூல் கிடைக்கும் என்பதால், விவசாயிகள் பூரிப்பில் உள்ளனர்.பருவ மழையால், மா மரங்களில் புதிய கிளைகளின் துளிர்ப்பு அதிக அளவில் உள்ளன. இதனால், அதிக அளவில் பூக்கள் பூத்துள்ளன. சூறாவளி காற்று இல்லாததால், பிஞ்சுகள் நிலைத்து நிற்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு, வறட்சி காரணமாக, மா மரங்களில் குறைந்த அளவிலான மகசூல் மட்டுமே கிடைத்தது.கடந்த ஆண்டு நவ., மற்றும் டிச., மாதங்களில் பெய்த கனமழையால், தற்போது மா மரங்கள் அதிக அளவில் துளிர்விட்டு பூத்து குலுங்குகின்றன.அடுத்த இரண்டு மாதங்களுக்கு, சூறாவளி காற்று வீசாவிட்டால், மாங்கனி விளைச்சல் அமோகமாக இருக்கும் என, விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.கடந்த ஆண்டு, பங்கனபள்ளி, மல்கோவா, ருமானி உள்ளிட்ட மாம்பழங்கள் கிலோ 30 ரூபாய் முதல், 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில், விலை குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**மாடுகள் வரத்து அதிகரிப்பால் வியாபாரிகள் வருகையும் அதிகரிப்பு**

ஈரோடு: மாடுகள் வரத்து அதிகரித்து இருப்பதை தொடர்ந்து, வியாபாரிகள் வருகையும் பன்மடங்காக அதிகரித்துள்ளது.

ஈரோடு, கருங்கல்பாளையயத்தில்,வாரந்தோறும் வியாழக்கிழமை மாட்டு சந்தை நடக்கிறது. ஆண்டுதோறும் தை பொங்கலுக்கு பின் துவங்கி, ஜூன் வரை, சந்தைக்கு அதிகளவில் மாடுகள் விற்பனைக்கு வரும். மாடு விற்பனைக்கான சீசன் காலமாக இது கருதப்படுகிறது. குறிப்பாக வளர்ப்பு கன்றுகளை வியாபாரிகள், விவசாயிகள் பெருமளவில் விரும்பி

வாங்கி செல்வர். கோடை காலத்தில் கால்நடை தீவன பற்றாக்குறை, தீவன விலையேற்றம், குறையும் பால் சுரப்பு தன்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், மாடுகளை விற்பனை செய்யவே கால்நடை வளர்ப்போர் விரும்புவர். ஜூன் மாதத்தில் மழை துவங்கியவுடன் மீண்டும் மாடுகள் வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டுவர். இங்கு, எச்.எப்., சிந்து கிராஸ், செவளை காளைகள் அதிகளிவில் விற்பனைக்கு வருகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கோவா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும், மாடுகளை வாங்க தற்போது வியாபாரிகள் வந்த வண்ணம் உள்ளனர். பசு மாடு 500 விற்பனைக்கு வந்தன. விலை, 16 ஆயிரம் முதல், 32 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. எருமை மாடு 450 விற்பனைக்கு வந்தன. இது, 14 ஆயிரம் முதல், 18 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. வளர்ப்பு கன்றுகள் 200 விற்பனைக்கு வந்தன. விலை, 2,000 முதல், 5,000 ரூபாய் வரை விற்பனையாகின. கேரள மாநில வியாபாரிகள் வருகை நேற்று குறைவாகவே இருந்தது. கிறிஸ்துவ வியாபாரிகள் தவக்காலம் கடைபிடிக்கின்றனர். இக்கால கட்டத்தில் புதிய செயல்களை செய்வதை தவிர்ப்பர். எனவே மாடு வாங்க, விற்க ஆர்வம் காட்டவில்லை. எனினும் பிற மாநில வியாபாரிகள், கேரள மாநிலத்தில் கிறிஸ்தவர் அல்லாதவர்கள் மாடுகளை வாங்கி செல்ல வந்து இருந்தனர். வரும் வாரங்களிலும் மாடுகள் வரத்து அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாயிகள் கடன் விடுதலை மாநாடு': இன்று பல கட்சி தலைவர்கள் பங்கேற்பு

ஈரோடு: ஈரோடு, வ.உ.சி., பூங்காவில், விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கம் சார்பில், இன்று, 'விவசாயிகள் கடன் விடுதலை மாநாடு' நடக்கிறது.

இதுகுறித்து, இயக்க ஒருங்கிணைப்பாளர் தெய்வசிகாமணி கூறியதாவது: வறட்சி, மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், வாங்கிய கடனை செலுத்த முடியவில்லை. விளை பொருளுக்கு உரிய விலை

கிடைக்கவில்லை. கடந்த நான்கரை ஆண்டுகளில், 1,420 விவசாயிகள் தமிழகத்தில் தற்கொலை செய்துள்ளனர். ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில், விவசாயிகள் கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கிய விவசாய கடன்களை தள்ளுபடி செய்தது போல, தமிழகத்திலும் தள்ளுபடி செய்ய வேண்டும். தேசிய நதிகளை இணைக்கும் திட்டத்துக்கு முன்னோடியாக, தமிழகத்தில் உள்ள நதிகளை இணைக்க வேண்டும். பசும்பால் லிட்டர், 40 ரூபாய், எருமைப்பால் லிட்டர், 50 ரூபாய் கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டும். பால் பவுடர் இறக்குமதியை தடை செய்ய வேண்டும். கரும்பு டன்னுக்கு, 4,000 ரூபாய் வழங்க வேண்டும். எத்தனால் உபயோகத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மாநாட்டில் வலியுறுத்துகிறோம். இம்மாநாட்டில், த.மா.கா., தலைவர் வாசன், 3.30 மணிக்கும், பா.ம.க., நிறுவனர் ராமதாஸ், 4 மணிக்கும், ம.தி.மு.க., பொதுச்செயலாளர் வைகோ, 5.30 மணிக்கும், தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின் மாலை, 6.30 மணிக்கும் பேசுகின்றனர். மேலும், கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் டி.கே.ரங்கராஜன் எம்.பி., மற்றும் துரைமாணிக்கம் மற்றும் பல்வேறு விவசாய சங்கங்கள் பங்கேற்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**திண்டுக்கல்லில் துவரை பயிரில் வாடல் நோய்**

திண்டுக்கல்:"துவரை பயிரை தாக்கும் வாடல் நோயை கட்டுப்படுத்த' திண்டுக்கல் வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார் ஆலோசனை வழங்கினார்.

அவர் தெரிவித்ததாவது: துவரையில் "பியூசேரியம் உடம்' என்ற வாடல் நோய் எல்லா பருவங்களி<லும் ஏற்படும். இளஞ்செடிகள் பாதிக்கப்பட்டால் இலைகள் மஞ்சளாகவும், பழுப்பாகவும் மாறுவதுடன் அதன்காம்புகளின் மீது பழுப்பு வளையம் ஏற்படும்.

வளர்ந்த செடியில் நோய் தாக்குதல் இருந்தால் இலைகள் மஞ்சளாக மாறி, பின் வாடிவிடும். வாடிய செடிகளை பிடுங்கி பார்த்தால் வேர்கள் வளர்ச்சி குன்றி காணப்படும்.

பட்டையை உரித்தால் உட்புறத்தில் மண் நிறத்தில் கீற்றுகள் தென்படும். வெண்மை நிற பூசன வளர்ச்சி நோய் முற்றிய நிலையில் தண்டின் அடிப்பாகத்தில் தென்படும்.

செடிக்கு எடுத்துச் செல்லப்படும் உணவு சத்துக்கள் மற்றும் நீர் ஆகியவை வேர்ப்பாகத்திலிருந்து மேல் நோக்கி எடுத்து செல்வது தடைபடுகிறது.

இதுவே வாடல் நோய் ஏற்பட காரணமாகிறது. மண்ணின் கார அமில நிலை 7.6 முதல் 8.0 வரை இருக்கும் போது இந்நோய் அதிகமாக தோன்றும் இயல்புடையது.நோய் கட்டுப்பாடு: நோயை கட்டுப்படுத்த, டிரைக்கோடெர்மா விரிடி டால்கம் பவுடர் 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 10 கிராம் அல்லது ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் திரம் போட வேண்டும்.

சூடோமோனாஸ் புளுரசன்ஸ் அல்லது டிரைக்கோடெர்மா விரிடியை(2.5 கிலோ/எக்டேர்) 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது மணலில் கலந்து விதைத்த 30 நாட்கள் கழித்து இட வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட இடத்தில் கார்பன்டாசிம் ஒரு கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும், என்றார்.

**தாண்டிக்குடி பகுதியில் பனி:விவசாயிகள் பாதிப்பு:கருகியது மலை வாழைக்காய்**

தாண்டிக்குடி;தாண்டிக்குடி மலைப்பகுதியில் நீடிக்கும் பனியின் தாக்கத்தால் மலை வாழைக்காய் கருப்பு நிறமாக உருமாறி விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி கீழ்மலை, சிறுமலை பகுதியில் மட்டுமே புவிசார் குறியீடு உரிமை பெற்ற மலைவாழை விளைச்சல் <உள்ளது. இதில் முடிக்கொத்து, செந்தளை நோய், காட்டுப் பன்றி தாக்குதலால் நாளுக்கு நாள் இதன் பரப்பு சுருங்கி வருகிறது.

மருத்துவ குணம் நிறைந்த மலைவாழைக்காய்க்கு சந்தையில் எப்போதும் தனி மவுசு உண்டு. தற்போது கோடை காலத்தில் சுட்டெரிக்கும் வெயில் மற்றும் பனியின் தாக்கத்தால் இயல்பான பச்சை நிறம் கருப்பு நிறமாக மாறியுள்ளது. இதை மலைப்பகுதியில் (சாரல்) என்கின்றனர்.

டிசம்பரில் துவங்கும் குளிர் மற்றும் பனி, பிப்ரவரி இறுதியில் நிறைவடையும். வழக்கத்திற்கு மாறாக நடப்பாண்டில் பனியின் தாக்கம் அதிகம் உள்ளது. இதன் எதிரொலியாக சந்தைக்கு வரும் வாழைக்காய் பாதி கருப்பு நிறமாக உள்ளது. 400 காய்கள் கொண்ட முதல் ரகம் அதிகபட்சமாக ரூ.3,700 என்ற நிலையில் இதுபோன்ற கருப்பு நிறத்தால் ரூ.1,500 க்கு விலை போகிறது. நீடிக்கும் வறட்சிக்கு மத்தியில் விலை வீழ்ச்சி விவசாயிகளை பாதித்துள்ளது.

வியாபாரி கூறியதாவது: பச்சை நிறமாக உள்ள காய்களுக்கு மட்டுமே வாடிக்கையாளார்களிடம் வரவேற்புள்ளது. நிறம் மாறினாலும் சுவை மற்றும்

குண நலன்களை பொறுத்தமட்டில் வேறுபாடில்லை. பனியின் தாக்கம் குறைந்தால் இப்பிரச்னை குறைந்து விடும், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கால்நடை மருந்தகம் திறப்பு

பள்ளிப்பட்டு, : பள்ளிப்பட்டு அடுத்துள்ளது ஆண்ரவேடு கிராமம். இந்தக் கிராமத்தில் தமிழக அரசின் சார்பில் கால்நடை மருந்தகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கால்நடை உதவி இயக்குனர் செல்லதுரை தலைமை தாங்கினார். ஊராட்சி மன்றத் தலைவர் இந்திரா மணி வரவேற்றார். பள்ளிப்பட்டு ஒன்றிய குழு தலைவர் சாந்தி பிரியா சுரேஷ் மருந்தகத்தைத் திறந்து வைத்தார்.இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கவுன்சிலர் செல்விசரவணன், கால்நடை மருத்துவர் கம்பிதுரை, ஜெங்காளுபள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரபாபு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பருத்தி மூட்டை வரத்து அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி, : கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.55 லட்சத்திற்கு பருத்தி மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன. கள்ளக்குறிச்சி பருத்தி சந்தைக்கு கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், சேலம் உள்ளிட்ட மாவட்டத்தில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நேற்று 463 விவசாயிகள், 4100 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு எடுத்துவந்தனர்.

கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரத்தில் வரத்து அதிகமாக இருந்தது. எல்ஆர்ஏ பருத்தி ரகம் ஒரு குவிண்டால் குறைந்த விலை ரூ.4169, அதிகபட்ச விலை ரூ.4719, சுவின் குறைந்த விலை ரூ.5269, அதிக விலை ரூ.5790. 4100 மூட்டைகள் மொத்தம் ரூ.55 லட்சத்திற்கு கொள்முதல்செய்யப்பட்டன.

**போச்சம்பள்ளியில் பதநீர் சீசன் துவக்கம்**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் பதநீர் சீசன் துவங்கியுள்ளதால், வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் பதநீர் சீசன் துவங்கும். டிசம்பர் முதல் மே மாதம் வரை பதநீர் கிடைக்கும். பனைமரத் தொழிலாளர்கள பதநீரை இறக்கி விற்பனை செய்கின்றனர். பனை மரத்தில் ஆண் மஞ்சரி, பெண் மஞ்சரி என்று இரண்டு வகை உண்டு. இரண்டில் இருந்துமே பதநீரை எடுக்கலாம். இந்த பதநீர் சுவை மிக்கதாகவும், சிறிது அமிலதன்மை கொண்டதாகவும் இருக்கும். மழை மற்றும் காற்று அதிகம் வீசும் காலங்களில் பதநீரின் தரம் குறைந்துவிடும். பனை மரம் 150 ஆண்டுகள் ஆயுள் கொண்டது. 12 ஆண்டுகளில் இருந்து பதநீர் சுரக்க தொடங்கும். தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி, மத்தூர் திப்பனூர், களர்பதி, ஒட்டபட்டி, புளியாண்டபட்டி, ஆனந்தூர் அம்மன்கோவில்பதி உள்ளிட்ட பகுதிகளில் பதநீர் சீசன் துவங்கி உள்ளது. இந்த பதநீரை குடித்தால் பற்கள் வலிமையாகிறது. ஈறுகளில் ஏற்படும் ரத்த கசிவை தடுக்கிறது, பித்தத்தை குறைக்கிறது. வருடத்திற்கு ஒரு முறை கிடைப்பதால் சிறுவர் முதல் பெரியவர் வரை பதநீரை விரும்பி வாங்கி பருகி வருகிறார்கள். விற்பனை அதிகரித்துள்ளதால் பதநீர் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## உள்ளூர் வர்த்தகம் போச்சம்பள்ளி வாரச்சந்தையில் 3 டன் கொள்ளு விற்பனை

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி வாரச்சந்தையில் 3 டன் கொள்ளு விற்பனை செய்யப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியின் சுற்றுவட்டார பகுதிகளில் அதிக அளவில் கொள்ளு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புளியாண்டப்பட்டி, பாளேத்தோட்டம், கொடமாண்டபட்டி, மத்தூர், தாதாம்பட்டி, கல்லாவி, அரசம்பட்டி, மஞ்சமேடு, மாவுத்தூர் திருவயலூர் உள்ளிட்ட பகுதியில் மா தோட்டங்களில் ஊடு பயிராகவும், மானாவாரி நிலங்களிலும் கொள்ளு சாகுபடி செய்துள்ளனர். கொள்ளு பருப்பில் புரோட்டின் சத்து 30 சதவீதம் உள்ளது. கொழுப்பு சத்து மிக குறைவாக உள்ளதால் சர்க்கரை

நோயாளிகளுக்கு நல்லது. தற்போது போச்சம்பள்ளி பகுதியில் கொள்ளு அறுவடை தீவிரமடைந்துள்ள நிலையில், போச்சம்பள்ளியில் நேற்று கூடிய வாரச்சந்தைக்கு விவசாயிகள் அதிக அளவில் கொள்ளுவை விற்பனைக்கு கொண்டுவந்தனர். சுமார் 3 டன் கொள்ளு விற்பனைக்கு வந்தது. கிலோ ரூ.25க்கு விற்கப்பட்ட கொள்ளுவை மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். ஆந்திரா, கர்நாடகம் மற்றும் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, பர்கூர், செங்கம், வேலூர், அரூர் போன்ற பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்து மூட்டை கணக்கில் கொள்ளுவை வாங்கி வாகனங்களில் கொண்டு சென்றனர். துவரை வரத்தும் அதிகம்: அதேபோல் துவரை வரத்தும் இருந்தது. அரூர், தர்மபுரி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, வேலூர், காவேரிப்பட்டணம் மற்றும் கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட இடங்களிலிருந்து வந்திருந்த வியாபாரிகள் துவரை கொட்டையை மூட்டை கணக்கில் வாங்கிச்சென்றனர்.

## போச்சம்பள்ளி வாரச்சந்தையில் காலிபிளவர் விலை சரிவு 10 ரூபாய்க்கு விற்பனை

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி வாரச்சந்தையில் காலிபிளவர் விலை சரிந்தது. 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட காலிபிளவரை மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் வாரந்தோறும் கூடும் சந்தை பிரசித்தம். இங்கு, அனைத்து பொருட்களும் மலிவாக கிடைப்பதால் சுற்றுவட்டார பகுதி மக்கள் சந்தைக்கு வந்து ஒரு வாரத்திற்கு தேவையான பொருட்களை வாங்கிச் செல்வர். கடந்த வாரம் சந்தையில் காலிபிளவர் ஒன்று ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில், சந்தையில் விலை குறைந்தது. ஒரு பூ ரூ.10க்கு விற்பனையானது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், சூளகிரி பகுதியில் விளைச்சல் அதிகரித்துள்ளதால் போச்சம்பள்ளி வாரச்சந்தைக்கு வரத்து இரட்டிப்பாகி உள்ளது. இதனால், விலை குறைந்துள்ளது. பொதுமக்கள் போட்டி போட்டுக்கொண்டு வாங்கிச் சென்றனர் என்றனர்.

## விதையின் முளைப்புதிறன் அறிந்து சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்று பயனடைய அழைப்பு

ஊட்டி, : நீலகிரி மாவட்ட விவசாயிகள் விதையின் முளைப்புக்திறன் அறிந்து பயிர் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்று பயன்பெறுமாறு கேட்டு கொள்ளப்பட்டுள்ளது. ஊட்டி விலைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் லாவண்யா ஜெயசுகா கூறியிருப்பதாவது: நீலகிரி மாவட்ட விவசாயிகள் விதையின் முளைப்புத்திறன் அறிந்து பயிர் சாகுபடி மேற்கொள்ள வேண்டும். ஈரப்பதம், இன புறத்தூய்மை, பூச்சி நோய் தாக்குதல் இல்லாமை போன்றவை தான் நல்ல விதைகள் என சான்றழிக்கப்படுகிறது. விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைகளின் புறத்தூய்மை, முளைப்புதிறன் குறித்து பரிசோதனைகள் செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் விதைபரிசோதனை நிலையத்தில் விதைகளின் முளைப்பு திறன் குறித்து பரிசோதித்து பயிரிட்டு அதிக மகசூல் பெற வேண்டும். இதற்கு கட்டணமாக ரூ.30 செலுத்த வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் விளையும் கேரட், பீட்ரூட், பட்டாணி, பீன்ஸ், நூல்கோல், முள்ளங்கி, முட்டைகோஸ், காளிப்பிளவர், டர்னிப் போன்றவற்றின் முளைப்புத்திறன் குறித்த ோசாதனை முடிவுகள் 7 முதல் 10 நாட்களில் தெரிவிக்கப்படும். எனவே விவசாயிகள் விதையின் முளைப்புதிறன் அறிந்து பயிர் செய்து அதிக மகசூல் பெறலாம். விதை பரிசோதனை செய்ய வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகம், ரோஜாபூங்கா, விஜயநகரம், ஊட்டி என்ற முகவரியில் அணுகலாம்.

## நீலகிரியில் நீர்வளத்தை பாதுகாக்க மரக்காடுகளை பாதுகாப்பது அவசியம்

ஊட்டி, : நீலகிரியின் நீர்வளத்தை பாதுகாக்க இங்குள்ள புல்வெளி மற்றும் சோலை மரக்காடுகளை பாதுகாப்பது அவசியம் என கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் சார்பில் தண்ணீர் சுழற்சி மாற்றுதல் திட்டத்தின் கீழ் ஏடிரீ, பெரல் மற்றும் என்.சி.பி.எஸ்., ஆகிய மூன்று தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் மேற்கு தொடர்ச்சி மலையில் நீர் ஆற்றல் மற்றும் கார்பன் சேவைகள், உச்சநிலை மழைக்காடு மற்றும் வேளாண் சுற்றுசூழல் குறித்து ஊட்டி அருகேயுள்ள அவலாஞ்சி வனப்பகுதிகளில் ஆய்வு நடத்தி வருகின்றனர். 2012 முதல் மூன்று ஆண்டுகள் தீவிர மழை,

நிலத்தின் பயன் அதன் மாற்றங்கள் மற்றும் சுற்றுசூழல் பாதிப்புகள் குறித்து ஆய்வு நடக்கப்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாக அதிக மழையால் ஏற்பட கூடிய பாதிப்புகள் மற்றும் எதிர்கால பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த கருத்தரங்கு ஊட்டியில் நடந்தது. ஊட்டியில் உள்ள இந்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு மைய தலைவர் ஓ.பி.எஸ்.,கோலா தலைமை தாங்கி கருத்தரங்களை துவக்கி வைத்தார். கருத்தரங்கில் அவலாஞ்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழை தொடர்பான ஆய்வுகள் குறித்து விளக்கப்பட்டது. தொடர்ந்து அதிக மழை பொழிவு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் மூத்த ஆய்வாளர் பெல்லா கூறுகையில், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நீர் ஆற்றல் மற்றும் கார்பன் சேவைகள், உச்சநிலை மழைக்காடு மற்றும் வேளாண் சுற்றுசூழல் குறித்து கடந்த 2012ம் ஆண்டு முதல் கர்நாடகா மாநிலத்திலும், 2013 முதல் நீலகிரி தெற்கு வன கோட்டத்திற்குட்பட்ட அவலாஞ்சி வனப்பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறோம். அவலாஞ்சி பகுதியில் 30க்கும் மேற்பட்ட மழையளவுமானிகள் பொருத்தப்பட்டு மழை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வை பொறுத்தவரை நீலகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 4000 மி.மீ., முதல் 4500 மி.மீ., மழை பெய்துள்ளது. கொலேறிபெட்டா, கோரக்குந்தா பகுதிகளில் அதிக மழை பொழிவு பதிவாகியுள்ளது. குறைந்தபட்சமாக கொலேறிபெட்டா பகுதிக்கு அருகேயுள்ள லக்கிடி பகுதியில் மழை பதிவாகியுள்ளது. 30 வருட மழை அளவு தகவல்களை பார்த்தால் ஒரு ஆண்டு அதிகமழை பொழிவும், ஒரு ஆண்டு குறைவான மழை அல்லது மழை பொய்த்து போதல் போன்ற காரணங்கள் ஏற்படுவதற்கு பருவநிலை மாற்றங்களே காரணமாகும். இதுபோன்ற காரணங்களால் 6 மாதம் பெய்த வேண்டிய மழை ஒரே வாரத்தில் பெய்கிறது. இதற்கு காரணம் பருவநிலை மாற்றங்களே ஆகும். மண் அரிப்பு, ராசயண உரங்கள் பயன்படுத்துதல் போன்ற காரணங்களால் மண் வளம் குறைந்து போதல் போன்றவை மழை பொழிவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நீலகிரி மாவட்டத்ைத பொறுத்தவரை புல்வெளி காடுகளில் நீர்வளம் அதிகம் உள்ளது. மழை பெய்யும் போது நீரை உறிஞ்சி வைத்து கொள்ளும் தேவைப்படும் போது வெளியிடும். ஆனால் சீகை, கற்பூரம் போன்ற அந்நிய நாட்டு

தாவரங்களால் நீர்வளம் பெருக்க முடிவதில்லை. காரணம் இவற்றின் வேர்கள் எத்தனை அடி அழத்தில் நீர் இருந்தாலும் அதுவரை சென்று தண்ணீரை உறிஞ்சி பயன்படுத்தி விடுகின்றன. எனவே நீலகிரியை பொறுத்தவரை இங்குள்ள புல்வெளிகள் மற்றும் சோலை காடுகளை பாதுகாத்தால், நீர்வளம் பாதுகாக்க முடியும் என்றார்.

## தடுப்பணையை தூர்வார வேண்டும்

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி அருகே நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே உள்ள தடுப்பணையைத் தூர் வாரினால் 10 ஆயிரம் ஏக்கரில் பயிரிடும் விவசாயிகள் பயனடைவார்கள். எனவே தடுப்பணை தூர் வார இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரவக்குறிச்சி அடுத்த கணக்குப்பிள்ளைபுதூர் அருகே நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே மவுத அணை என்னும் தடுப்பணை உள்ளது. அரவக்குறிச்சியின் தெற்கு மற்றும் மேற்குப்பகுதியில் பெய்யும் மழை மற்றும் பரப்பலாறு அணையிலிருந்து திறந்து விடப்படும் நீர் இந்த தடுப்பணையின் நீர் பிடிப்புப்பகுதிகளாகும்.

இந்த தடுப்பணையில் தேங்கும் நீர் கணக்குப்பிள்ளைபுதூர், ஜெயபுரம், காமக்காபட்டி, புதுவாடி, பெருமாள்கவுண்டன்புதூர், மேளையாண்டிபட்டி உள்ளிட்ட 15க்கு மேற்பட்ட கிராமங்களில் உள்ள சுமார் 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களின் பாசனத்திற்கு பயனுள்ளதாக உள்ளது. இங்கு சூரியகாந்தி, மக்காச்சோளம், முருங்கை, நெல் ஆகியவை பயிரிடப்படுகிறது. இதற்காக இந்த அணையிலிருந்து 6 அடி அகலமுள்ள வாய்க்கால் 3 கிமீ துரத்திற்குச் செல்கிறது. நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே மவுத அணை என்னும் இந்த தடுப்பணை 8 அடி உயரம் உள்ளதாக இருந்தது. ஆனால் தற்போது 7 அடி உயரத்திற்கு மணல் மூடி ஒரு அடி மட்டுமே உயரமுள்ளதா காணப்படுகிறது. இதனால் மழைக் காலங்களில் மிகக்குறைவாகவே நீர் சேகரமாகின்றது. அதே போல இதிலிருந்து செல்லும் வாய்க்காலும் மணல் மூடி புதர் மண்டிக் கிடக்கிறது. தற்பொழுது கரூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் 800 அடிக்கு கீழே போய் விட்டது என்று நிலத்தடி நீர் மட்ட ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். ஆகையால் இந்த தடுப்பணையையும், வாய்க்காலையும் தூர்வாரினால் அதிக அளவில் தண்ணீர் சேமிக்கப்படும்.

இதனால் இப்பகுதியிலுள்ள விவசாயக் கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர் மட்டம் உயரும். இதனால் இந்த அணையிலிருந்து தூரத்திலுள்ள விவசாயிகளும் வாய்க்கால் மூலம் பயன் பெறுவார்கள். தற்பொழுது தமிழக அரசு குளங்கள், ஏரிகள், தடுப்பணைகளைக் கண்டறிந்து தூர் வார திட்டமிட்டுள்ளது. தற்போது மழைக்காலம் முடிந்து கோடை காலம் ஆரம்பித்துள்ளது. அதில் இந்த அணையையும் சேர்த்து தூர் வாரினால் இப்பகுதியிலுள்ள 10 ஆயிரம் ஏக்கரில் பயிரிடும் விவசாயிகள் பயனடைவார்கள். இந்த தடுப்பணையை துர்ர் வார வேண்டுமென்று இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

அரியலூர் : திருவெங்கனூரில் நெல் கொள்முதல் நிலையம் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரியலார் மாவட்டக்கில் 2015- 16ம் ஆண்டுக்கான சம்பா பருவக்கில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 27 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இதைதொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மேலும் கொள்முதல் நிலையம் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அகன்படி அரியலார் வட்டக்கில் வடுகபாளையம் ஊராட்சி திருவெங்கனூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே அப்பகுதி விவசாயிகள், அருகில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை அனுகி பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எண்ணெய்வித்து பயிர்களில் பயிர் மேலாண்மை பயிற்சி

பொன்னமராவதி : பொன்னமராவதி அருகே நெறிஞ்சிக்குடி கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் எண்ணெய்வித்து பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி நடத்தப்பட்டது. வேளாண் துறையின் கீழ்

செயல்படுத்தப்படும் விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டமான வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலும் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக பொன்னமராவதி வட்டாரம் நெறிஞ்சிகுடியில் நடந்த நிலக்கடலை மற்றும் எள் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் நிர்வாகம் என்ற பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் சண்முகம் முன்னிலை வகித்தார். நிலக்கடலை பயிரில் விதைப்பு முதல் அறுவடை வரை அதிக மகசூல் பெற கடைப்பிடிக்க வேண்டிய நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து புதுகை வேளாண் இணை இயக்குநர் அலுவலக வேளாண் அலுவலர் ( மாநில திட்டம்) ஜெகதீஸ்வரி பயிற்சியளித்தார். எண்ணெய்வித்துப் பயிர்களில் கடைப்பிடிக்க வேண்டிய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து வேளாண் அலுவலர் கவிதாவும், எள் பயிரில் கூடுதல் மகசூல் பெறும் தொழில்நுட்பங்கள் குறித்து அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவியும் பயிற்சியளித்தனர்.

முன்னதாக உதவி வேளாண் அலுவலர் குமாரசாமி வரவேற்றார். உதவி வேளாண் அலுவலர் அருளானந்தம் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் மலர்விழி மற்றும் அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பிரியங்கா, ராஜீ ஆகியோர் செய்திருந்தனர்.

**காய்கறி பயிர்களில் நோய் தாக்குதல் மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறும் விவசாயிகள்**

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி பகுதியில் காய்கறி சாகுபடியில் நோய் தாக்குதல் மற்றும் விலை குறைவால் விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறிவருகின்றனர்.தேவதானப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான கெங்குவார்பட்டி, அட்டணம்பட்டி, புல்லக்காபட்டி, எருமலைநாயக்கன்பட்டி, சில்வார்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, குள்ளப்புரம், அ.வாடிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த காலங்களில் காய்கறி சாகுபடி அதிகளவு நடைபெற்று வந்தது.

ஆனால் காய்கறி சாகுபடியில் நோய் தாக்குதல், வெண்டை செடியில் பூச்சி தாக்குதல், டிஸ்கோ கத்தரியில் வேர் புழு தாக்குதல், நாட்டு கத்தரியில் புழு தாக்கதல், போன்றவைகளாலும், காய்கறி விளைந்து மார்க்கெட்டிற்கு வந்தால் விலை குறைவு போன்ற காரணங்களால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வந்தனர்.இது போன்ற நஷ்டங்களை தவிர்க்க தற்போது விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறிவிட்டனர். இது குறித்து எருமலைநாயக்கன்பட்டி விவசாயி ஒருவர் கூறுகையில், காய்கறி சாகுபடியில் அதிக லாபம் கிடைத்துவந்த நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பெரும் நஷ்டத்தை சந்தித்து வந்தோம்.

நோய் தாக்குதல், விலை குறைவு போன்ற காரணங்களால் பெரிதும் நஷ்டம் ஏற்பட்டு வந்தது. தற்போது தேவதானப்பட்டி பகுதியில் அதிகளவில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுவருகிறது.கடந்த நான்கு மாதத்திற்கு முன் ஒரு குவிண்டால் (100கிலோ) ரூ.1700வரை விற்பனையானது. ஆனால் தற்போது ஒரு குவிண்டால் ரூ.1400 வரை விற்பனையாகிறது. இருந்தாலும் அதிக நஷ்டம் இல்லாமல் இருப்பதால் விவசாயிகள் ஆர்வத்துடன் மக்காச்சோளம் சாகுபடியை செய்து வருகின்றனர்' என்றார்.

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இரண்டாம் போக நெல் அறுவடை துவங்கியது விளைச்சலும் குறைவு, விலையும் குறைவு**

கம்பம், : கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இரண்டாம் போக நெல் அறுவடை பணிகள் துவங்கியது. விளைச்சல் மற்றும் விலை குறைவாலும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன் போதிய மழை இல்லாததால் இப்பகுதியில் பெரும்பாலான இடங்களில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த இரண்டாம் போக நெற் கதிர்கள் கருகி விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

இந்நிலையில் இந்தாண்டு விவசாயிகள் எதிர்பார்த்த அளவு பருவ மழை பெய்ததால் தண்ணீர் பற்றாக்குறையின்றி கடந்த சில மாதங்களுக்கு முன்பாக இரண்டாம் போக நெல் நடவு செய்யப்பட்டு தற்போது கடந்த சில தினங்களாக கம்பம், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.விவசாயிகள் எதிர்பார்த்த அளவு விளைச்சல் இல்லாததாலும் போதிய விலை கிடைக்காததாலும் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், "தற்போது மதுரை, விருதுநகர், தஞ்சாவூர், அருப்புக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மொத்த வியாபாரிகள் 60 கிலோ எடை கொண்ட ஒரு மூடை ரூ.910க்கு கொள்முதல் செய்து எடுத்து செல்கின்றனர். இது விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை. மூடை ரூ.ஆயிரத்திற்கு மேல் விற்பனை செய்யப்பட்டால் மட்டுமே போதிய லாபம் கிடைக்கும்" என்றனர்.

**வறண்ட பூமியில் மிரள வைக்கும் சூரியகாந்தி பூக்கள் விளைச்சல் கமுதி பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி**

கமுதி, : வறண்ட பூமியில் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் இந்த ஆண்டு சூரியகாந்தி பூ அமோக விளைச்சல் கண்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ராமநாதபுரம் மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதியான கமுதி தொடர்ந்து வறட்சி நிலவுகிறது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக வறட்சி நிலவி வந்தது. இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை வழக்கத்திற்கு மாறாக கூடுதலாகப் பொழிந்தது. இதன் காரணமாக கமுதி அருகே பெருநாழி, திம்மநாதபுரம், பொந்தம்புளி, ராணிசேதுபுரம், குமராபுரம், காடாமங்கலம், வெள்ளாங்குளம், லெட்சுமிபுரம், டி.வி.எஸ்.புரம், பாப்புரெட்டிபட்டி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் இந்த ஆண்டு சூரிய காந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது சூரியகாந்தி பூ நல்ல விளைச்சலுடன் பூத்துக் குலுங்குகிறது. இதனால், விவசாயிகள் அறுவடைக்குத் தயாராகி வருகின்றனர். சூரியகாந்தி அமோக விளைச்சல் கண்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.வயல்களில் பூத்துக் குலுங்கும் சூரிய காந்தி பூக்களை பார்க்கும் சாலை வழியாகச் செல்வோர் கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதாகக் கூறுகின்றனர்.

**கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு பயிற்சி**

முதுகுளத்தூர், : முதுகுளத்தூர் அருகேயுள்ள கீர னூரில் வட்டார கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.காரைக்குடி ஆவின் கால் நடை ஆலோசகர் டாக்டர் வீரமணிகண்டன் தலைமை வகித்தார். அபிராமம் கால்நடை உதவி மருத்துவர் பிரபு, கீரனூர் உதவி மருத்துவர் சந்திரசேகர், காக்கூர் கால்நடை உதவி மருத்துவர் சிவராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலைவகித் தனர்.

இதில் விவசாயிகளுக்குத் தரமான கறவை மாடு தேர்வு செய்தல், கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை மற்றும் கிடேரி கன்று பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து விரிவாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. 40க்கும் மேற்பட்ட கால்நடை வளர்ப்பு விவசாயிகள் கலந்துகொண்டனர். மேலும் வெள் ளாடு வளர்க்கும் விவசாயிகளுக் கும் அதைத் தாக்கும்நோய் கள், அதன் தடுப்பு முறைகள், குட்டிகளைப் பராமரித்தல், குடற்புழு நீக்குதல் மற்றும் தடுப்பு அட்டவணை உள்ளிட்டவை குறித்து விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது.

## முருங்கப்பாக்கத்தில் ரூ15 லட்சம் செலவில் கால்நடை மருத்துவ கட்டிடம்

புதுச்சேரி, : புதுவை அரசு கால்நடை பராமரிப்பு துறை சார்பில் புதிய கால்நடை இன அபிவிருத்தி கிளை நிலையத்துக்கான கட்டிடம் முருங்கப்பாக்கம் பள்ளத்தெருவில் ரூ.15 லட்சம் செலவில் கட்டப்பட உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடந்தது. துறை இயக்குநர் பத்மநாபன் வரவேற்றார். சபாநாயகர் சபாபதி தலைமை

தாங்கினார். துறை செயலர் மிகிர் வர்தன் முன்னிலை வகித்தார். முதல்வர் ரங்கசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி கட்டிட பணியை தொடங்கி வைத்தார். இணை இயக்குநர் தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார். வாரிய தலைவர்கள் பாண்டியன், ஞானசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கப்பாளங்கரையில் பயிற்சி முகாம்: கால்நடைகளை தாக்கும் நோய் குறித்த செல்போன்களுக்கு குறுந்தகவல் அனுப்ப வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**



கிணத்துக்கடவு,

கப்பளாங்கரையில் நடந்த பயிற்சிமுகாமில் கால்நடைகளை தாக்கும்நோய் குறித்து செல்போன்களுக்கு குறுந்தகவல் அனுப்ப வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

பயிற்சி முகாம்

கிணத்துக்கடவு அருகே உள்ள கப்பளாங்கரையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டம் சார்பில் விவசாயிகளுக்கு நாட்டு கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. இதற்கு ஊராட்சி மன்ற துணைத்தலைவர் கணேசன் தலைமை தாங்கினார். வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் வடிவேலு முன்னிலை வகித்தார். இதில் துணை இயக்குனர் இக்பால் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

நாட்டு கோழி வளர்ப்பு ஒரு லாபகரமான தொழில். கோழியின் எடைக்கு ஏற்றார் போல் அதனை வருமானம் அதிகரிக்கும். இதனை பராமரிப்பது எளிது. கோழிகளை தாக்கக்கூடிய நோய்கைள கட்டுப்படுத்த வேண்டும்.

தடுப்பூசி

வெள்ளை கழிச்சல் என்ற நோய் காற்று மூலம் பரவும். இதை தடுக்க முன்னதாகவே 1 மாத இடைவெளியில் தடுப்பூசி போட வேண்டும். குடல்புழு, ரத்த கழிச்சல் போன்ற நோய்களும் கோழிகளை தாக்கும். நோய்களை கட்டுப்படுத்த கால்நடை டாக்டர்களின் அறிவுரைகளை பெற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து விவசாயிகள் பேசும் போது கூறியதாவது:–

மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்கு விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவது போன்று, கோழிகளுக்கு தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்த வேண்டும். மேலும் வேளாண்மை வணிகம் மற்றும் உழவர்சந்தைகளில் பதிவு செய்யப்படும், செல்போன் குறுந்தகவல்போன்று, கால்நடைகளை தாக்கக்கூடிய நோய் மற்றும் பராமரிப்பு குறித்து குறுந்தகவல் செல்போன்களுக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

முகாமில் உதவிதொழில்நுட்ப வல்லுனர்கள் தினேஷ்குமார், நந்தகுமார், உதவிவேளாண்மை அலுவலர் தமிழரசன் மற்றும் 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் துணை வேளாண்மை அலுவலர் நடராஜ் நன்றி கூறினார்.

## 15 விவசாயிகளுக்கு வேளாண்மை கருவி பவுன்ராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்




பொறையாறு அருகே வேளாண்மைத்துறை சார்பில் 15 விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண்மை கருவிகளை பவுன்ராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்.

வேளாண்மைகருவிகள்

பொறையாறு அருகே திருக்கடையூர் அரசு விதை பண்ணை வளாகத்தில் செம்பனார்கோவில் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண்மை கருவிகள் வழங்கும் விழா மற்றும் ரூ.1 கோடியே 50 லட்சம் செலவில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிட கட்டுமான பணி தொடக்க விழா நடைபெற்றது. விழாவுக்கு பவுன்ராஜ் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். ஒன்றியக்குழு

தலைவர் ஜனார்த்தனம், தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் வெற்றிவேலன் வரவேற்றார். விழாவில் 15 விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் வேளாண்மை கருவிகளை பவுன்ராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்.

கட்டுமானபணி

தொடர்ந்து எம்.எல்.ஏ., திருக்கடையூரில் ரூ.1 கோடியே 50 லட்சம் செலவில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிட கட்டுமான பணியை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறுகையில், ஒரு நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் விவசாயத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும். இதனை கருத்தில் கொண்டு தமிழக முதல்-அமைச்சர், விவசாயம் மற்றும் கல்விக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி உள்ளார். இதுபோன்று அனைத்து துறைகளிலும் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. விவசாயிகளின் நலன் கருதியும், எனது கோரிக்கையை ஏற்றும் தற்போது திருக்கடையூரில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடம் கட்ட, முதல்-அமைச்சர் அனுமதி வழங்கி உள்ளார். இதற்காக முதல்-அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். விழாவில் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் கணேசன், திருவிளையாட்டம் வேளான்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் முரளி, துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், அட்மா திட்ட அலுவலர்கள் பார்த்தீபன், சுகன்யா உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் திருமுருகன் நன்றி கூறினார்.

## நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 5,700 மூட்டை பருத்தி ரூ.1.10 கோடிக்கு ஏலம்



நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 5 ஆயிரத்து 700 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 10 லட்சத்துக்கு ஏலம் போனது.

பருத்திஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம்,

வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 5 ஆயிரத்து 700 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

ரூ.1.10கோடிக்குவிற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1 கோடியே 10 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 626 முதல் ரூ.5 ஆயிரத்து 121 வரையிலும், டி.சி.எச். ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 793 முதல் ரூ.6 ஆயிரத்து 322 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 875 முதல் ரூ.5 ஆயிரத்து 376 வரையிலும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## முல்லைப்பெரியாறு அணையில் ரூ.97 லட்சம் செலவில் பராமரிப்பு பணிகள்




தேனி,

முல்லைப்பெரியாறு அணையில் ரூ.97 லட்சம் செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

தமிழக–கேரள மாநில எல்லையில் முல்லைப்பெரியாறு அணை அமைந்து உள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீராதாரமாக இந்த அணை திகழ்கிறது. இந்த அணையின் நீர்மட்ட உயரம் 152 அடி ஆகும். அணையில் தண்ணீர் தேக்கும் அளவை 136 அடியாக குறைத்து 35 ஆண்டுகளுக்கு பிறகு, உச்சநீதிமன்ற தீர்ப்பை தொடர்ந்து கடந்த 2 ஆண்டுகளாக தண்ணீர் தேக்கும் அளவு 142 அடியாக உயர்த்தப்பட்டு உள்ளது.

இந்த அணையில் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி அமைக்கப்பட்ட மூவர் கண்காணிப்பு குழுவின் அறிவுரையின் படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அணைக்கு தேவையான பராமரிப்பு பணிகள் குறித்து துணை கண்காணிப்பு குழுவினர் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் மூவர் கண்காணிப்பு குழுவினர் ஆய்வு செய்து தேவையான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டு வருகின்றனர். இதற்கிடையே முல்லைப்பெரியாறு அணையில் வர்ணம்

பூசுதல் மற்றும் சில குறிப்பிட்ட பராமரிப்பு பணிகளுக்கு தமிழக அரசு ரூ.97 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது.

<u>பராமரிப்பு பணிகள்</u>

இந்த நிதியின் மூலம் அணையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பணிகள் தற்போது தீவிரமாக நடந்து வருகின்றன. சுமார் 20 தொழிலாளர்கள் அணையில் தங்கி இருந்து பராமரிப்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர். முல்லைப்பெரியாறு அணை, பேபி அணை, மதகு பகுதிகள், கேளரி பகுதிகளில் வர்ணம் பூசும் பணி நடந்து வருகிறது. மேலும், அங்குள்ள கட்டிடங்களுக்கும் வெள்ளையடித்து, தேவையான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட உள்ளன.

இதுகுறித்து தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, 'அணையில் ரூ.97 லட்சம் மதிப்பில் நடந்து வரும், வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பராமரிப்பு பணிகளுக்கு தேவையான பொருட்கள் வல்லக்கடவு வழியாக வாகனங்களில் கொண்டு வரப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் அணையில் தங்கி இருந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் ஓரிரு வாரங்களில் இந்த பணிகள் நிறைவு அடையும். இது வழக்கமாக மேற்கொள்ளு ம் பராமரிப்பு பணிகள் தான்' என்றனர்.

## காஞ்சீபுரத்துக்கு 1,110 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



திருவாரூரில் இருந்து காஞ்சீபுரத்துக்கு நேற்று 1,110 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

நெல்கொள்முதல்

சம்பா அறுவடை பருவத்தையொட்டி திருவாரூர் மாவட்டத்தில் 433 அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவைக்காக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணி தற்போது விறு, விறுப்பாக நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் திருவாரூர், பேரளம், நீடாமங்கலம் ஆகிய 3 இடங்களில் உள்ள ரெயில் நிலையங்களில் இருந்து நெல் அனுப்பும் பணி நடந்து வருகிறது.

திருவாரூரில் நேற்று 8-வது முறையாக அரவைக்கு நெல் அனுப்பும் பணி நடந்தது. இதில் காஞ்சீபுரத்துக்கு 1,110 டன் நெல் அனுப்பப்பட்டது. முன்னதாக திருவாரூர் பகுதியில் உள்ள கொள்முதல் நிலையங்களில் இருந்து நெல் மூட்டைகள் 107 லாரிகளில் திருவாரூர் ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன.

அதைதொடர்ந்து சுமை தூக்கும் தொழிலாளர்கள் நெல் மூட்டைகளை சரக்கு ரெயிலில் 29 பெட்டிகளில் அடுக்கி வைத்தனர். பின்னர் 1,110 டன் பொது ரக நெல்லுடன் சரக்கு ரெயில் காஞ்சீபுரம் புறப்பட்டு சென்றது.

நீடாமங்கலம்

இதேபோல் நீடாமங்கலம், மன்னார்குடி சுற்று வட்டார பகுதிகளில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட 1,100 டன் பொதுரக நெல் மூட்டைகள், 87 லாரிகளில் நீடாமங்கலம் ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் சரக்கு ரெயிலின் 29 பெட்டிகளில் நெல் மூட்டைகளை சுமை தூக்கும் பணியாளர்கள் அடுக்கி வைத்தனர். இதைதொடர்ந்து சரக்கு ரெயில்

1,100 டன் நெல் மூட்டைகளுடன் புதுக்கோட்டைக்கு புறப்பட்டு சென்றது.

## 14 இடங்களில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கலெக்டர் உத்தரவு



திருவண்ணாமலை மாவட்டத்தில் 14 இடங்களில் நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க கலெக்டர் ஞானசேகரன்உத்தரவிட்டுள்ளார்.

காரீப் பருவம் 2015–2016–ம் ஆண்டில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் பொருட்டு திருவண்ணாமலை வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க கலெக்டர் ஞானசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி நார்த்தாம்பூண்டி, கீழ்பென்னாத்தூர், தண்டராம்பட்டு

வட்டத்தில் ராதாபுரத்திலும், செங்கம் வட்டத்தில் புதுப்பாளையத்திலும், கலசபாக்கம் வட்டத்தில் எலத்தூரிலும், போளூர் வட்டத்தில் வசூரிலும், சேத்துபட்டு வட்டத்தில் சேத்துப்பட்டு நகரத்திலும், ஆரணி வட்டத்தில் சேவூரிலும், செய்யார் வட்டத்தில் செய்யாறு, எச்சூரிலும், வெம்பாக்கம் வட்டத்தில் பிரம்மதேசத்திலும் மற்றும் வந்தவாசி வட்டத்தில் மழையூர், பெரணமல்லூர், கீழ்கொடுங்கலூரிலும் ஆக 14 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

விலைநிர்ணயம்

இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சன்ன ரக நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு குறைந்த பட்ச ஆதார விலையாக ரூ.1,450 மற்றும் ஊக்கத் தொகையாக ரூ.70 ஆக ஒரு குவிண்டாலுக்கு 1,520 ரூபாயும், பொது ரக நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு குறைந்த பட்ச ஆதார விலையாக ரூ.1,410 மற்றும் ஊக்கத் தொகையாக ரூ.50 ஆக ஒரு குவிண்டாலுக்கு ரூ.1,460 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

மேலும் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு அவர்களிடம் இருந்து பெறப்பட்ட நெல்லுக்கு உண்டான தொகை அவர்களின் வங்கிக் கணக்குகளில் இ.சி.எஸ். மூலம் செலுத்தப்படும். இந்த நவீன முறைக்கு அனைத்து விவசாயிகளும் ஒத்துழைப்பு தருமாறும், இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தங்களின் நெல்லினை விற்பனை செய்து பயன் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளையும் கலெக்டர் அ.ஞானசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மீனவர்களின் 10 பிரதான கோரிக்கைகள் என்ன?




**1.** பழவேற்காடு ஏரி, பக்கிங்காம் கால்வாய், மன்னார் கடல் பகுதிகளைச் சூழலியல் சீர்கேடுகளிலிருந்து பாதுகாக்கப் போர்க்கால நடவடிக்கை.

**2.** கடல் மீன்வளத்தைச் சீராகப் பராமரிக்க பாலாறு முதல் தாமிரபரணி வரையிலான அனைத்துத் தமிழக ஆறுகளின் உபரிநீரும் போதுமான அளவு கடலில் கலக்கவிட வேண்டும். ஆற்றுப்படுகைகளிலும், கடற்கரைகளிலும் மணல் மற்றும் கனிம மணல் கொள்ளை முற்றிலுமாகத் தடை செய்யப்பட வேண்டும்.

**3.** சுற்றுச் சூழலுக்குத் தீங்கு விளைவிக்கிற, கடற்கரை உவர்நீர் இறால் பண்ணைகளை மூடிவிட வேண்டும்.

**4.** கடற்கரையில் மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடித் தங்குதளங்கள், வணிக முனையங்கள், கடல் அரிப்புத் தடுப்புச் சுவர்கள் உள்ளிட்ட அடிப்படை மீன்பிடிக் கட்டுமானத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

**5.** அந்தமான் கடல் பகுதியில் தமிழக விசைப் படகுகள், மீன்பிடிக்க நவீன தொழில்நுட்பமும், வழிகாட்டுதலுடன் பாதுகாப்பும் வழங்க மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும்.

**6.** மன்னார் பல்லுயிர்ச் சூழலியல் பகுதியில் விசை மீன்பிடிப் படகுகளின் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும். தமிழ்நாட்டுக் கடலில் ரெட்டைமடி, சுருக்குமடி வலை பயன்பாட்டை உடனே தடை செய்ய வேண்டும்.

**7.** எங்கள் ஆழ்கடல் மீன்வளங்களைக் கொள்ளையிட்டு, கடலைச் சீரழிக்கும் பன்னாட்டு மீன்பிடிக் கப்பல்களின் உரிமங்களைத் திரும்பப் பெற மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

**8.** ஒருங்கிணைந்த நடுவண் கடல் மீன்பிடிச் சட்டம் கொண்டுவர மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். பாரம்பரிய மீன்பிடிப் படகுகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள 3 கடல் மைல் எல்லைக்குள் விசைப் படகுகள் மீன் பிடிப்பதை முற்றாகத் தடை செய்ய வேண்டும்.

**9.** தூத்துக்குடி ஸ்டெர்லைட், கடலூர் சிப்காட், எண்ணூர் பேசின் பிரிட்ஜ் அனல் மின்நிலையம் போன்றவற்றால் ஏற்பட்டுள்ள கடல் சீர்கேட்டைத் தணிக்கை செய்து, கடல் சூழலைக் காக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**10.** 10 ஆண்டுகளுக்கு முன்பே காலாவதியாகிவிட்ட, கல்பாக்கம் அணுமின் நிலையத்தை நிரந்தரமாக மூட வேண்டும். கூடங்குளம் அணு மின் திட்டம் தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். தமிழகக் கடல் சூழலைக் கெடுக்கும் வகையில் கூடங்குளத்தை மேலும் மேலும் அபாயகரமாக்கும் முயற்சிகளைக் கைவிட வேண்டும். மேலும், தமிழகக் கடற்கரையில் 100 அனல்மின் நிலையம் அமைக்கும் முயற்சியை மாநில அரசு கைவிட வேண்டும். அதற்குப் பதில், சோலார் மின் உற்பத்தி போன்ற சுற்றுச் சூழலுக்குக் கேடு விளைவிக்காத திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.____

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## புதிய காப்பீட்டு திட்டத்தில் 50 சதவீதம் விவசாயிகளை சேர்க்க திட்டம்: பிரதமர் மோடி உறுதி



போபால், பிப். 19-

புதிய பயிர்க் காப்பீட்டு திட்டம் தொடர்பாக, வேளாண் மேம்பாடு குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய புத்தகத்தை பிரதமர் மோடி நேற்று வெளியிட்டார்.

மத்திய பிரதேசம் மாநிலம், ஷெரோர் மாவட்டத்தில் உள்ள ஷெர்பூர் கிராமத்தில் இதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முதல்-மந்திரி சிவராஜ்சிங் சவுகான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில், பயிர்காப்பீட்டு தொகை, மண் பரிசோதனை குறித்த அட்டைகளையும் வழங்கினார்.

விழாவில் பேசிய பிரதமர் மோடி, இந்திய விவசாயிகளில்,

குறைந்தபட்சம், 50 சதவீதம் பேரையாவது, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும், ஒரு கிராமத்தில் உள்ள ஒரே ஒரு விவசாயியின் பயிர்கள் பாதிக்கப்பட்டாலும், அவர் இந்த புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் மூலம் பயன்பெறுவார் என்று உறுதியளித்தார்.

முன்னதாக, புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்திற்கு கடந்த மாதம் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த திட்டத்தில், விவசாயிகள், கரீப் பயிர்களுக்கு, 2 சதவீதமும், ரபி பயிர்களுக்கு, 1.5 சதவீதமும், பிரீமியம் செலுத்தினால் போதும்; மீதமுள்ள தொகையை, மத்திய, மாநில அரசுகள் செலுத்தும்.